SOFA-I-M

## மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஐந்து - __________ நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| --- | --- |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **5 × 1 = 5**

1. சிறுபஞ்சமூலம் ______________ நூல்களுள் ஒன்று.
   அ) பதினெண்கீழ்க்கணக்கு ஆ) பதினெண்மேல்கணக்கு இ) சங்க இலக்கியம்
2. மடந்தை என்ற சொல்லின் வேறுபெயர் ______________
   அ) நங்கை ஆ) அன்னம் இ) மேதினி
3. ‘தலைமைப் பண்பு’ பாடத்தில் சிறந்த நிருவாகி எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ______________
   அ) கார்வேந்தன் ஆ) தர்மராசு இ) செல்வநாயகம்
4. புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் ______________
   அ) மனுநீதிச்சோழன் ஆ) சிபி மன்னன் இ) பாண்டியன்
5. ‘கல்வியே தெய்வம்’ பாடலின் ஆசிரியர் ______________
   அ) பாரதி சுகுமாரன் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 × 1 = 5**

6. ‘வனப்பு’ என்ற சொல்லின் பொருள் ______________
7. ‘வாரித் தந்த வள்ளல்’ பாடத்தில் குறிப்பிடப்படும் வள்ளல் ______________
8. இசைப் பாடல்களைப் பாடுபவர் ______________
9. கண்ணகியின் கணவர் பெயர் ______________
10. கேடில் விழுச்செல்வம் ______________

**இ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** **3 × 1 = 3**

11. கள்வனல்லன் 12. பொற்காசு 13. கண்ணோட்டம்

**ஈ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **3 × 1 = 3**

14. கால் + சிலம்பு 15. நிறைந்து + இருக்கும் 16. தகுதி + உடைய

**உ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** **3 × 1 = 3**

17. தோன்றும் 18. விருப்பு 19. வருத்தம்

**ஊ) பின்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** **2 × 1 = 2**

20. அ) அறியாமை ஆ) நம்பிக்கை

II. **பின்வரும் பாடலை அடிமாறாமல் எழுதுக.** 1 × 4 = 4

21. ‘கண்வனப்பு’ எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.

III. **பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடை எழுதுக.** 5 × 2 = 10

22. தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஐந்து மூலிகைகள் என்று சிறுபஞ்சமூலத்தில் குறிப்பிடப்படுபவை எவை?

23. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?

24. சிறந்த நிருவாகத் திறமைக்கான பண்புகள் என்னென்ன?

25. இணைச்சொற்கள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

26. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது,

27. கல்வி கற்றால் நம்மை வந்தடைவது யாது?

IV. **அ) பின்வரும் தொடர்களில் எது சரி ☑ எது தவறு ☒ எழுதுக.** 4 × 1 = 4

28. சிறுபஞ்சமூலம் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. ☐

29. கொல்லிமலை அரசன் வல்வில் ஓரி. ☐

30. ஊரின் முன்னேற்றத்திற்கு பலரை நாடிச் சென்றவர் செல்வநாயகம் .☐

31. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் பாரதியார். ☐

**ஆ) பொருத்துக.** 4 × ½ = 2

| | | |
|---|---|---|
| 32. வேந்தன் | - | மாணிக்கம் |
| 33. எதிரிணை | - | யானை |
| 34. கண்ணகியின் சிலம்பு | - | அரசன் |
| 35. களிறு | - | கிழக்கும் மேற்கும் |

V. **பின்வரும் வினாவிற்கு விடை எழுதுக.** 4 × 1 = 4

36. தை மாதம் பர்ஸ்ட் நாள் பொங்கல் பெஸ்டிவெல் கொண்டாடினேன். (பிறமொழிச் சொல்லை நீக்கி எழுதுக.)

37. பாலைவனம் - (புதிய சொற்களை உருவாக்குக.)

38. மல்லிகைப் பூ எவ்வளவு ________________ உள்ளது. (மணம் / மனம்)

39. நன்மையும் மென்மையும் தோன்றும் - நல

    நயமதும் நம்மை அண்டும்

    (இப்பாடலில் உள்ள எதுகை, மோனை எழுதுக.)

VI. **கட்டுரை.** 5

40. “கடையெழு வள்ளல்களின் சிறப்பு” என்ற தலைப்பில் ஒரு பக்கத்திற்கு கட்டுரை எழுதுக.